DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 4

| | | |
|---|---|---|
| Name | : | முத்தம்மாள் (Lw - 5) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 21.08.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், அலங்காநத்தத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். தேதி நினைவில் இல்லை சுமார் இரண்டு வருடம் இருக்கும். காலை சுமார் 10 - 11 மணி இருக்கும். அப்போது நான் ஆஜர் எதிரிகளுடன் நான் பூப்பறித்து கொண்டு இருந்தேன். அப்போது அ.சா.1 பூங்கொடி தென்புறம் இருந்து வரும் பாதையில் வந்தார். பூங்கொடி ஆஜர் எதிரி மலர்கொடியிடம் அவருடைய பத்திரத்தை தருமாறு கேட்டார் பணத்தை திருப்பி கொடுத்தால் பத்திரத்தை திருப்பி கொடுப்பதாக மலர்கொடி சொன்னார். பின்பு பூங்கொடி பத்திரத்தை நான் வாங்கும் வழியில் வாங்கிகொள்கிறேன் என்று கெட்ட வார்த்தையில் திட்டிவிட்டு அங்கு இருந்த சென்றுவிட்டார். போலிசார் என்னைவிசாரிக்கவில்லை.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

ஆஜர் 3வது எதிரி சந்திரன் எனது உடன பிறந்த சகோதரன் என்றால் சரிதான். 2வது எதிரி மலர்கொடி சந்திரனின் மனைவி என்றால் சரிதான். 1வது எதிரி ஆனந்தன் எனது

சகோதரன் சந்திரனின் மகன் என்றால் சரிதான். அ.சா.2 விசித்திரா 1வது எதிரியின் மனைவி என்றால் சரிதான். அ.சா.1 பூங்கொடி விசித்திராவின் தாயார் என்றால் சரிதான். ஆஜர் 1வது எதிரியுடன் விசித்திரா சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். பிரச்சனை நடப்பதற்கு ஒரு வருடம் முன்பாக விசித்திரா ஆனந்தனை விட்டு பிரிந்து சென்றார். 1வது எதிரி விசித்திராவிடம் இருந்து விவாகரத்து கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். விசித்திரா விவாகரத்து வழங்ககூடாது என்று வழக்கு நடத்தினார் என்றால் சரிதான். ஆனால் விவாகரத்து கிடைத்துவிட்டது. சம்பவம் நடந்தபோது யாருடைய தோட்டத்தில் நான் வேலை செய்தேன் என்றால் ஆஜர் 3வது எதிரியின் தோட்டத்தில் வேலைசெய்தேன். என்ன பயிர் செய்திருந்தார்கள் என்றால் மல்லிகை பூ போட்டு இருந்தார்கள். எவ்வாறு பயிருக்கு பாசனம் செய்தார்கள் என்றால் வாய்க்கால் வழி நீர் செலுத்தி பாசனம் செய்தார்கள். மம்முட்டி வைத்துதான் வயல்களுக்கு தண்ணீர் மாற்றுவார்கள் என்றால் சரிதான். அதனால் மண்வெட்டி, கொத்து ஆகியவற்றை வயலிலேயே வைத்திருப்போம் என்றால் சரியல்ல வீட்டிற்கு செல்லும்போது எடுத்துசென்று விடுவோம் தேவைப்படும்போது வயலுக்கு எடுத்துவருவோம். பிரச்சனை நடந்த பிறகு விசித்திரா அ.சா.1 பூங்கொடியை அங்கு இருந்த அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. அ.சா.3 ராமசாமி வயலில் இருந்தாரா என்றால் இல்லை அவர் வீட்டில் இருந்தார். சம்பவம் நடந்த இடத்திற்கும் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 1/2 கி.மீ. துாரம் இருக்கும். ஆஜர் எதிரிகள் அன்றையதினம் நீதிமன்றத்திற்கு செல்லவேண்டும் என்று கூறினார்களா என்றால் இல்லை. நானும் ஆஜர் எதிரிகளும் ஒரே ஊரில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வயலில் வேலை இருந்தால் ஆஜர் எதிரிகள் என்னை வீட்டிற்கு வந்து அழைத்து செல்வார்கள். இன்று நீதிமன்றத்திற்கு வரும்போது அஜர் எதிரிகளுடன் நான் சேர்ந்து வந்தேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது 10.02.2021ம் தேதி காலை 8.15 மணியளவில் நான் ஆஜர் எதிரிகளுக்கு சொந்தமான நிலத்தின் அருகே இருந்தபோது ஆஜர் 1வது எதிரியின் மாமியார் அ.சா.1 பூங்கொடி வந்தபோது ஆஜர் எதிரிகள் விவாகரத்து வழக்கு சம்மந்தமாக உள்ள பிரச்சனை காரணமாக பூங்கொடியை ஆபாச வார்த்தைகளால் திட்டி அவமானத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் எதிரி ஆனந்தன் பூங்கொடியை கையால் அடித்து காயத்தைஏற்படுத்தினார் என்றும் எதிரி மலர்கொடி பூங்கொடியை கையால் குத்தி காயத்தை ஏற்படுத்தினார் என்றும் எதிரி ராஜா மண்வெட்டிபுடியால் பூங்கொடியை தாக்கி காயத்தை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார்

என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு அஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதாலும் அவர்கள் என்னை சாட்சியம் அளிப்பது தொடர்பாக வென்றுவிட்ட காரணத்தினாலும் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**